ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

## பெரியாழ்வார் அருளிச்செய்த பெரியாழ்வார் திருமோழி

# 5.2 – நெய்க்குடத்தை

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 5.2 – நெய்க்குடத்தை

‡ நெய்க் குடத்தைப் பற்றி ⋆
    ஏறும் எறும்புகள் போல் நிரந்து ⋆ எங்கும்
கைக் கொண்டு நிற்கின்ற நோய்காள் ! ⋆
    காலம் பெற உய்யப் போமின் ⋆
மெய்க் கொண்டு வந்து புகுந்து ⋆
    வேதப் பிரானார் கிடந்தார் ⋆
பைக் கொண்ட பாம்பணையோடும் ⋆
    பண்டன்று பட்டினம் காப்பே ‖ **5.2.1** ‖

சித்திரகுத்தன் எழுத்தால் ⋆
    தென் புலக் கோன் பொறி ஒற்றி ⋆
வைத்த இலச்சினை மாற்றித் ⋆
    தூதுவர் ஓடி ஒளித்தார் ⋆
முத்துத் திரைக் கடற் சேர்ப்பன் ⋆
    மூதறிவாளர் முதல்வன் ⋆
பத்தர்க்கமுதன் அடியேன் ⋆
    பண்டன்று பட்டினம் காப்பே ‖ **5.2.2** ‖

வயிற்றில் தொழுவைப் பிரித்து ⋆
    வன் புலச் சேவை அதக்கி ⋆
கயிற்றும் அக்காணி கழித்துக் ⋆
    காலிடைப் பாசம் கழற்றி ⋆
எயிற்றிடை மண் கொண்ட எந்தை ⋆

இராப்பகல் ஓதுவித்து ⋆ என்னைப்
பயிற்றிப் பணி செய்யக் கொண்டான் ⋆
பண்டன்று பட்டினம் காப்பே ॥ **5.2.3** ॥

மங்கிய வல்வினை நோய்காள் ! ⋆
உமக்கும் ஓர் வல்வினை கண்டீர் ⋆
இங்குப் புகேன்மின் புகேன்மின் ⋆
எளிதன்று கண்டீர் புகேன்மின் ⋆
சிங்கப் பிரான் அவன் எம்மான் ⋆
சேரும் திருக்கோயில் கண்டீர் ⋆
பங்கப்படாதுய்யப் போமின் ⋆
பண்டன்று பட்டினம் காப்பே ॥ **5.2.4** ॥

மாணிக் குறள் உருவாய ⋆
மாயனை என் மனத்துள்ளே ⋆
பேணிக் கொணர்ந்து ⋆
புகுத வைத்துக் கொண்டேன் பிறிதின்றி ⋆
மாணிக்கப் பண்டாரம் கண்டீர் ⋆
வலி வன் குறும்பர்கள் உள்ளீர் ! ⋆
பாணிக்க வேண்டா நடமின் ⋆
பண்டன்று பட்டினம் காப்பே ॥ **5.2.5** ॥

உற்ற உறு பிணி நோய்காள் ! ⋆
உமக்கொன்று சொல்லுகேன் கேண்மின் ⋆
பெற்றங்கள் மேய்க்கும் பிரானார் ⋆
பேணும் திருக்கோயில் கண்டீர் ⋆
அற்றம் உரைக்கின்றேன் ⋆
இன்னம் ஆழ்வினைகாள் ! ⋆ உமக்கிங்கோர்

பற்றில்லை கண்டீர் நடமின் ⋆
    பண்டன்று பட்டினம் காப்பே ॥ **5.2.6** ॥

கொங்கைச் சிறுவரை என்னும் ⋆
    பொதும்பினில் வீழ்ந்து வழுக்கி ⋆
அங்கோர் முழையினில் புக்கிட்டு ⋆
    அழுந்திக் கிடந்துழல்வேனை ⋆
வங்கக் கடல் வண்ணன் அம்மான் ⋆
    வல்வினை ஆயின மாற்றி ⋆
பங்கப் படா வண்ணம் செய்தான் ⋆
    பண்டன்று பட்டினம் காப்பே ॥ **5.2.7** ॥

ஏதங்கள் ஆயின எல்லாம் ⋆
    இறங்க விடுவித்து ⋆ என்னுள்ளே
பீதக வாடைப் பிரானார் ⋆
    பிரம குருவாகி வந்து ⋆
போதில் கமல வன் நெஞ்சம் ⋆
    புகுந்து என் சென்னித் திடரில் ⋆
பாத இலச்சினை வைத்தார் ⋆
    பண்டன்று பட்டினம் காப்பே ॥ **5.2.8** ॥

‡ உறகல் உறகல் உறகல் ⋆
    ஒண்சுடர் ஆழியே ! சங்கே ! ⋆
அற எறி நாந்தக வாளே ! ⋆
    அழகிய சார்ங்கமே ! தண்டே ! ⋆
இறவு படாமல் இருந்த ⋆
    எண்மர் உலோக பாலீர்காள் ! ⋆

பறவை அரையா ! உறகல் ⋆
    பள்ளியறை குறிக்கொண்மின் ॥ **5.2.9** ॥

‡ அரவத்தமளியினோடும் ⋆
    அழகிய பாற்கடலோடும் ⋆
அரவிந்தப் பாவையும் தானும் ⋆
    அகம் படி வந்து புகுந்து ⋆
பரவைத் திரை பல மோதப் ⋆
    பள்ளி கொள்கின்ற பிரானை ⋆
பரவுகின்றான் விட்டுசித்தன் ⋆
    பட்டினம் காவற் பொருட்டே ॥ **5.2.10** ॥

அடிவரவு — நெய்க்குடத்தை சித்திரகுத்தன் வயிற்றில் மங்கிய மாணி உற்ற கொங்கை ஏதங்கள் உறக அரவத்து துக்கச்சுழலையை

நெய்க்குடத்தை முற்றிற்று

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்